# சூழ்ச்சிகள் வென்றதில்லை!
# சூரியன் மறைவதில்லை!

"தமிழாய்ந்த தமிழன் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்! தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த் தமிழ்நாட்டில் வாராது தடுத்தல் வேண்டும்! என்பது பாவேந்தர் பாரதிதாசனாரின் தமிழியக்க முழக்கம்.

ஜோசப் விஜய் முதல்வராகப் பொறுப்பேற்ற விழாவிலும், சட்டமன்றத் தற்காலிக அவைத் தலைவர் பொறுப்பேற்ற விழாவிலும் தமிழுக்கு அவமரியாதை கிடைத்திருக்கிறது. முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து, அதன் பின்னர் நாட்டுப்பண் இசைக்க வேண்டிய விழாவில் ஒன்றிய அரசின் கைக்கூலியாக மாறி, வந்தே மாதரம் பாடலை முதன்மைப்படுத்தித் தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவது இடத்திற்குத் தள்ளி இழிவுப் படுத்தி இருக்கிறார்கள்.

ஆனால் மேற்கு வங்கத்தில் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க அரியணை ஏறும் போது, வந்தே மாதரம் பாடல் அங்கே ஒலிக்கப்படவில்லை.

சங்கிகளது ஆர்.எஸ்.எஸ். சங்கீதம் கேட்க ஆரம்பித்து விட்டது. ஒன்றிய அரசின் 'இந்துத்துவா' கொள்கையைத் தமிழக வீதியில் பரப்ப ஓர் அடிமை ஆட்சி கோட்டையில் ஏறி இருக்கிறது. பெரியார் சொன்னதைப் போலப் பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது.

"இன்னொரு தேர்தலைத் தி.மு.க. விரும்பவில்லை; தமிழகத்தில் த.வெ.க. ஆட்சி அமைப்பதற்குத் தி.மு.க. இடையூறு செய்யாது; அரசியலமைப்பு நெருக்கடியையோ அல்லது மற்றொரு தேர்தலையோ தி.மு.க. விரும்பவில்லை. த.வெ.க. ஆட்சி அமைக்கட்டும்; ஆறு மாதங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். தி.மு.க. செயல் படுத்திய நலத்திட்டங்களைத் த.வெ.க. அரசு தொடர வேண்டும்; மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். பெண்களுக்கு மாதம் ரூ.2,500 வழங்கப்படும் என்ற த.வெ.க.வின் வாக்குறுதியை செயல்படுத்துவது கடினம்; தி.மு.க. சிறப்பான எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம் என்று தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தன் அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.

தளபதி மு.க. ஸ்டாலின் ஒரு முதலமைச்சர் போல் கொளத்தூர் தொகுதியில் நடந்து கொண்டதில்லை. தன்னைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் ஊழியம் செய்யும் தொண்டனாகவே தொகுதியில் கிடந்தவர்; எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற போதும் கடைசி வரைக் கூப்பிட்ட குரலுக்கு வரக் கூடியவராக அல்லாமல், கூப்பிடாமலேயே சென்று வந்தவர்; தொகுதி மக்களின் காவலனாக, வீட்டுப் பிள்ளையாக நடந்து கொண்டவர்;

வீட்டிலிருந்து கோட்டைக்குப் போகிறாரா? அல்லது கோட்டையிலிருந்து அறிவாலயம் வருகிறாரா? அல்லது முரசொலி அலுவலகம் செல்கிறாரா? மற்ற பகுதிகளின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறாரா? வெளியூர் சுற்றுபயணத்தைத் தொடங்குகிறாரா? அல்லது நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு சென்னை வருகிறாரா? "வீட்டுக்குப் போக வேண்டாம்;... தொகுதிக்கு செல்! என்று தன் ஓட்டுனரிடம் பணியாளர்களிடம் அடிக்கடி சொல்லிச் சென்று எந்த நேரத்திலும் 'தொகுதி... தொகுதி...' என்று ஒரு நகரச் சுத்தி தொழிலாளி போல்...துப்புரவுப் பணித் தொழிலாளி போல் தொகுதியின் காவலனாக இருந்தவருக்கு இந்தத் தேர்தல் பரிசைத் தந்தார்களா?.... உண்ணுவதை மறந்து, உறங்குவதை மறந்து, உடல் நலத்தை மறந்து, தமிழ்நாடு முழுவதும் மக்கள் நலப் பணிகளை செய்தது மட்டுமல்ல; பணியாளர்களிடம் கூறாமலேயே தொகுதிக்கு அடிக்கடிச் சென்று பார்வையிட்டவர்; மக்கள் சொல்லும் தொகுதிக் குறைகளை நீக்கிப் பரிகாரங்கள் பலப் பல செய்து கொடுத்தவர்க்கு இந்தப் பரிசா? சொல்லுங்கள் பார்க்கலாம்?..

ரூபாய் 44.88 கோடி மதிப்பில் பல சிவிக் (Civic) திட்டங்கள், சாலைகள், வடிகால், குடிநீர் வசதி போன்ற செய்தவர்தானே இந்த ஸ்டாலின்?; ரூபாய் 200 கோடிக்கு மேல் மதிப்பில் 45 க்கும் மேற்பட்ட நகராட்சி மற்றும் குடிநீர் திட்டங்கள் தொடக்கம், திறப்பு விழா செய்தவர் அல்லவா? புதிய குளிர்சாதன வசதி (Air Condition) பேருந்து நிறுத்தம் அமைத்துத் தந்தவர் இல்லையா? சாலையோரப் பூங்காக்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டு இடங்களை அமைத்து தந்தது தப்பா? அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (Arulmigu Kabaleeswarar and size Science college) புதிய கட்டிடங்களை ரூபாய் 31 கோடி அளவில் கட்டி முடித்துத் தந்தாரே.. அது தப்பா? அல்லது மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு உயர்த்த (Chief Minister creative Centre high speed internet) உருவாக்கிக் கொடுத்தாரே அது தவறா? நூலகங்கள், கல்வி ஆதரவு வசதிகள் மேம்பாடு என்றும் பெரியார் நகர் போன்ற பகுதிகளில் மருத்துவமனைகள் மேம்பாடு என்றும், டயாலிஸிஸ் மையங்கள், 'ரீஹேப் சென்டர்கள்' நிறுவியும், ஐ.சி.டி.எஸ் மையம் (Integrated Child Development Services) கட்டிடம் கட்டித் திறந்ததும், ரூபாய் 50 கோடிக்கு மேல் செலவு செய்து அலங்கார மீன் சந்தை (Ornamental Fish Market) உருவாக்கித் தந்தாரே.... இவையெல்லாம் தவறா? வேறு எது தவறு? இப்படியெல்லாம் கொளத்தூர் தொகுதிக்குச் செய்த சாதனைகளை மறந்து, மக்கள் எந்தவித அரசியல் அனுபவம், பக்குவம் இல்லாத ஒரு நடிகரின் கட்சிக்கும் வாக்களித்தது ஏன்? இது சரி என்று அரசியல் ஆய்வாளர்கள், பொது நோக்குக் கருத்தாளர்கள் சொல்லுகிறார்களா? மாயவலையில் சிக்கி ஜனநாயகத்தைப் படுகொலை செய்திருக்கிறார்கள். ஆம்; "ஜனநாயகத்தின் பலமும் இதுவே; பலகீனமும் இதுவே! என்று நம்மை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா சொல்வாரே... அதுதான் நடைபெற்று முடிந்திருக்கிறது.

### கவிஞர் தமிழ்தாசன்
### தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



மகளிர் உரிமைத் தொகை, மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், கல்லூரி கனவுத் திட்டம், சிகரம் தொடு திட்டம், தோழியர் விடுதி , மகளிர்க்கான இட ஒதுக்கீடு 40% ,சுய உதவிக் குழுக்கள் மானிய உயர்வு, பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 , கலைஞரின் கனவு இல்லம், தாயுமானவர் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி, அகழ்வாராய்ச்சி அருங்காட்சியகம், திருக்கோயில்கள் குடமுழுக்கு, கோயில்களின் பல்லாயிரம் ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்பு, மத நல்லிணக்கம் பேணல், பெண்கள் பாதுகாப்பு, கலைஞர் நூறாண்டு மருத்துவமனைகள், கலைஞர் நூறாண்டு நூலகம், கைத்தறி நெசவாளர்களுக்கு 300 யூனிட், விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட் மின்சாரம் இப்படியான திட்டங்கள் தந்ததால் தோல்வியா?

1.5 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு, மீன்பிடி குறைவு காலத்தில் நிவாரணம் ரூ. 6,000, இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48, உங்களின் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், முதல்வரின் முகவரித் திட்டம், வேர்களை தேடி திட்டம், சான்றோர் ஆன்றோர் பெயரிலான திட்டம், பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதம், மதுரை ஜல்லிக்கட்டு அரங்கம்,பாசன வேளாண்மை நவீனமயம்.... என்று இப்படியான கணக்கற்ற பொற்காலச் சாதனைத் திட்டங்களை மு.க.ஸ்டாலின் கொண்டு வந்து எவரும் சாதிக்க முடியாததை மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்தனரே... இவையெல்லாம் தப்பா? தவறா? ஒவ்வொரு வீட்டில் உள்ள ஒவ்வொரு நபரும் ஏதாவது ஒரு திட்டத்தை அனுபவிக்க வேண்டும் என்று கொண்டு வந்தாரே.. அது தவறு என்று எதிர்த்து வாக்கு அளித்தார்களா? யாராவது சொல்ல முடியுமா*?.....

அல்லது நடிகரின் கரூர் கூட்ட நிகழ்வில் 41 பேர் உயிரிழந்தார்களே.... அதனைச் சரி என்று ஏற்று வாக்களித்தார்களா? தன் கணவன், குழந்தைகளைக் கூடப் பார்க்க மாட்டேன்; நடிகர் தான் எனக்கு வேண்டும் என்று குடும்பத்தின் மதிப்பும், மரியாதையும் கெடுத்துக் பேசிய சில பெண்களின் மானமற்ற செயலைக் கேட்டுச் சரிதான் என்று வாக்களித்தார்களா? புயல், மழை வந்தால் ஓடி வந்து பார்க்கவும் வேண்டாம்; நிவாரணம் தந்து பசி, பிணிப் போக்கிடும் நபர்கள் தேவையில்லை என்று மக்களை நெருங்காத நடிகருக்கு வாக்களித்தார்கள்? மொழி, இனத்தைப் பாதுகாக்க மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கத் தேவையில்லை, மக்கள் பிரச்சினைகளில் கசையடிப்பட்டு இரத்தம் ஒழுக, ஒழுகச் சிறை சென்ற தியாகம் ஏதும் தேவையில்லை ; சினிமா கதாநாயகன் தான் வேண்டும் என்று வாக்களித்தார்களா? பின்பு எதற்காகத் தமிழ்நாடு மக்கள் வாக்களித்தார்கள் என்று பட்டியலிட்டு ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்வார்களா?

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த அண்ணாவைப் பார்த்து, "நீங்கள் சட்டமன்றம் செல்லவில்லையே, உங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் 50 பேர் செல்லுகிறார்கள். இதற்குத் தங்களது பதில் என்ன? " என்று கேட்டபோது, "இயேசு பிறந்த ஜெருசலம் நகருக்குள் கிறிஸ்துவர்கள் நுழையக் கூடாது என்று இஸ்லாமியர்கள் கூறியதால், பயங்கர சண்டை நடந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட நிபந்தனையுடன், அப்போர் நின்றது. "எல்லாக் கிறிஸ்தவரும் ஜெருசலம் செல்லும் உரிமை பெற்றார்கள். ஆனால், ஜெருசலம் நகருக்குள் கிறிஸ்தவர்களின் தலைவரான 'சால்டி ரிச்சர்ட்' மட்டும் உள்ளே வரக்கூடாது என்பதுதான் அது. நிபந்தனை பேரில், நான் வெளியே நிற்கிறேன். என் அணிவகுப்பு உள்ளே செல்கிறது. தலைவன் இல்லாமல் அணிவகுப்பு அமைக்க முடியும்; ஆனால் அணிவகுப்பு இல்லாத தலைவன் அமைக்க முடியாது என்ற சரித்திர உண்மையை அண்ணா எடுத்துச் சொல்லி நெஞ்சம் நெகிழச் செய்தார். "என் வடிவத்தில் 50 கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லுகிறார்கள். அவர்கள் கொள்கைகளைச் சொல்லி என் எண்ணத்தைச் சொல்லிப் பேசுவார்கள் என்று அண்ணா பதிலளித்தார் . அதே பதிலைப் போலத் தான், தளபதி அவர்கள் சட்டமன்றத்துக்குள் செல்ல வாய்ப்பு கிடைக்கவில்லைதான்; எனினும், அவர் வடிவத்தில் 59 உறுப்பினர்கள் செல்கிறார்கள்".

1936 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில், பெத்து நாயக்கன் பேட்டையில், நீதிக் கட்சி வேட்பாளராக மாமன்ற உறுப்பினர்க்குப் பேரறிஞர் அண்ணா போட்டியிட்டார் . குப்பைத் தொட்டிக்கு நடைபெற்ற அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பட்டாணிக் கடலை வியாபாரியான பெரியசாமி என்பவரிடத்தில் தோற்றுப் போனார். அப்படித் தோற்றுப் போனதால், அண்ணாவைக் காட்டிலும் பெரியசாமி சிறந்தவர், உயர்ந்தவர் என்று கருதலாமா?

1962ஆம் ஆண்டு அண்ணா காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்றத் தேர்தலில் இரண்டாவது முறை நின்ற போது, எஸ்.வி.நடேச முதலியார் எனும் ஒரு பேருந்து முதலாளியிடத்தில் தோற்றுப் போனார். அண்ணா அவர்கள் இது பற்றிப் பேசும் போது, "எதிர்கள் திட்டமிட்டுப் பணியாற்றினர்; வெற்றி பெற்றார்கள்; அதிலே அவர்கள் பெருமைப்படலாம்; புதிய நம்பிக்கை கூட ஏற்படக் கூடும்;ஆனால், அவர்களின் கணக்குத் தவறு. தோல்வியுடன் கழகம் கலைந்து விடும் என்று எண்ணுகிறார்களே ; அது தான் அவர்களின் தவறான கருத்து! நான் சட்டசபையில் இருந்து கொண்டு பணியாற்றுவதைத் தடுக்க மட்டுமே இந்தக் கேள்வி பயன்படும். எனவே, கழகத் தோழர்களை வேண்டிக் கொள்கிறேன்... தோற்று விட்ட தோல்விகளை மறந்து விடுங்கள்; கண் கலங்கி நிற்காதீர்கள்; நம் பயணம் தொடரும்! என்றார்.

காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக அண்ணா அவர்கள் இருந்தபோது, (1957 – 1962) எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து சட்டப்பேரவையில் நெசவாளர் பிரச்சினை, குடிநீர் தட்டுப்பாடு, சாலை, கழிவு நீர், விளக்கு வசதி, உள்ளூர் கட்டமைப்பு வசதிகள் போன்ற மக்களின் தேவைகளை எடுத்து வைத்து ஆழமாக வாதாடினார். ஒரு எம்.எல்.ஏ. என்ற முறையில் தொகுதியில் "தாமல் என்ற கிராமத்திற்குப் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டுத் திறப்பதற்கு முதல்வராக இருந்த காமராஜர் அவர்களையே அழைத்து வந்து திறக்கச் செய்தார். அந்த ஊர் மற்றும் சுற்றியுள்ள பல்வேறு ஊர்களின் குறைகளை நிவர்த்திச் செய்யக் கூறி எல்லாம் பட்டியலிட்டுப் பேசினார். ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் முன் உதாரணமாகத் திகழ்ந்தார். அது மட்டும் இல்லாமல் தமிழ்நாடு, இந்தியாவில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளில் தி.மு.க. தலைவர் என்ற முறையில் பொது மக்களிடத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவராக திகழ்ந்தார். அப்படிப்பட்ட அண்ணா அவர்கள், தான் பிறந்து, வளர்ந்த சொந்த ஊரிலேயே தோற்கடிக்கப்பட்டார்.

1975 இல் இந்தியாவில் நெருக்கடி நிலையைக் கொண்டு வந்த அன்றைய பிரதமர் இந்திரா காந்தியாரின் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் பல உயிர்ப் பலித் தியாகங்கள் செய்ததுடன், காரக்கிரகம் சென்ற இயக்கம் தி.மு.க. 1977 இல் தோற்கடிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் இந்திரா காந்தி பின்னர், கர்நாடக மாநிலம் சிக்மகளூர் வெற்றி பெற்றுப் நாடாளுமன்றம் நுழைந்த போது, ஒன்றிய ஜனதா அரசாங்கம் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்தது. அரசியலமைப்புச் சட்டத்தின் உரிமைகளைப் பறித்த அச் சர்வாதிகாரச் செயலை எதிர்த்துக் குரல் கொடுத்து, ஜனநாயகத்தைக் காப்பாற்றிய மாமனிதர் கலைஞர். பின்னர் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் (30.09.1979) "என்னை எதிர்ப்பதாக இருந்தாலும்; ஆதரிப்பதாக இருந்தாலும் உறுதியாக இருப்பவர் கருணாநிதி என்று போற்றியவர் காங்கிரஸ் தலைவர் இந்திரா காந்தி.

கழகம் தோல்விகளைக் கண்டு தனது தொடர்ப் பயணத்தை என்றும் நிறுத்திக் கொண்டதில்லை. 1977 இல் நெருக்கடி நிலையை எதிர்த்தற்காக ஆட்சி கலைப்பு செய்து, சர்க்காரியா கமிஷன் நியமித்து, விசாரணை என்ற பெயரால் அவப்பழிபைக் கழகத்தின் மீது சுமத்தப்பட்டது. பின்னர் நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை நாம் இழந்தோம் . 1980 இல் ஒன்றிய இந்திரா அரசால் எம்.ஜி.ஆர். ஆட்சி கலைக்கப்பட்டது. 50:50 இடங்கள் என்று திமுக, காங்கிரசுடன் கூட்டணி அமைத்த தவறான முடிவால் தோல்வியைச் சந்தித்தோம் ; 1984 இல் பிரதமர் இந்திரா காந்தியார் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். மாநில முதலமைச்சர் எம்.ஜி.ஆர் வாத நோய் தாக்கப்பட்டு, உடல்நிலை குன்றியதால்; அமெரிக்காவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் அனுதாபக் காரணங்களால் கழகம் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

1991 இல் ஈழத் தமிழர் ஆதரவு, விடுதலைப்புலிகள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எனத் தவறான குற்றஞ்சாட்டி; கலைஞர் தலைமையிலான சாதனைகள் நிகழ்த்தி நின்ற கழக ஆட்சி கலைக்கப்பட்டது. பின்பு இராஜீவ் காந்தி படுகொலை இப்படியான காரணங்களால் கழகம் தனது வெற்றி வாய்ப்பை இழந்தது. 2011இல் 2 ஜி அலைக்கற்றை விவகாரத்தில் தி.மு.க. மீது தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தி; கழகம் நாடாளுமன்றம், சட்டமன்றத் தேர்தலில் பெற வேண்டிய வெற்றி வாய்ப்பை இழந்தது. இப்படிப் பல்வேறு படி நிலைகளில் தி.மு.க. வெற்றி வாய்ப்புகளை இழந்தாலும்; இதற்கு இடையில் நடைபெற்ற பல்வேறு களங்களில் நின்று வெற்றிகள் பல படைத்தது தி.மு.கழகம். அந்நேரத்தில் பொற்காலச் சாதனைகள் நடத்திய தலைவர்கள் கலைஞரும், தளபதியும் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

உடம்பெல்லாம் மூளை; மூளையெல்லாம் சிந்தனை; சிந்தனை எல்லாம் வஞ்சனை என்று அரசியல் விமர்சனம் செய்யப்பட்ட மூதறிஞர் இராஜாஜி அவர்கள், "தி.மு.கழகத்தை மூட்டைப் பூச்சியைப் போல் நசுக்குவேன் என்றார். ஆனால், அதே மூதறிஞர் இராஜாஜி 1967 இல் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து, அண்ணா தலைமையில் ஆட்சி அமைய துணை நின்றார் என்பது வரலாறு.

ஏழைப் பங்காளர்; இந்தியாவின் பல பிரதமர்களை உருவாக்கிய 'கிங் மேக்கர்', என்று போற்றிப் புகழப்பட்ட கர்மவீரர் காமராஜர், "தி.மு.க.வைக் கட்டை விரலை நறுக்குவது போல், நான் வெட்டுவேன் என்று அரசியல் பேசினார். ஆனால், அதே காமராஜர் தி.மு.க. ஆட்சியின் தேவையை உணர்ந்து, நெருக்கடி நிலைக் காலத்தில், முதலமைச்சர் பதவியை விட்டு விலகி, தி.மு.க. ஆட்சியைக் கலைத்து விடாதீர்கள்; சுதந்திர இந்தியாவில் தமிழ்நாடு ஒன்றே சுதந்திரக் காற்றுடன் சுவாசிக்கிறது என்று சொல்லிக் கலைஞர் இடத்தில் வேண்டிக் கொண்ட வரலாறு உண்டு.

ஜெர்மனி சர்வாதிகாரியான அடால்ஃப் ஹிட்லர், ஆரிய இன மேலாதிக்கமும், யூத இன எதிர்ப்பையும் அடிப்படையாகக் கொண்டவன். தனது "நாஜி கட்சியான தேசிய சோசியலிச ஜெர்மன் தொழிலாளர்க் கட்சி (NSDAP) ஆட்சியில் 15 இலட்சம் குழந்தைகள் உள்ளிட்ட 60 இலட்சம் யூத இன மக்களைக் கொன்று அழித்தவன். இது தவிர, ரோமா மக்கள், மாற்றுத்திறனாளிகள், சோவியத் கைதிகள், அரசியல் எதிரிகள் எனப் பல இலட்சம் பேரைக் கொன்றவன். 1940 இல் பிரிட்டன் போரின் (Battle of Britain) போது, இலண்டன் மாநகரைத் தரை மட்டமாக்கக் கொக்கரித்தவன். அதற்குப் பிரிட்டன் பிரதமர் வின்ஸ்டன்ட் சர்ச்சில் "இலண்டனால் தாங்கிக் கொள்ள முடியும் (London can take it) என்று எதிர் வினையாற்றினார்.

சர்வாதிகாரி ஹிட்லரைத் தோற்கடிப்பதற்குப் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill), அமெரிக்க அதிபர் பிராங்க்ளின் ரூஸ்வோல்ட் (Franklin D.Roosevelt), சோவியத் யூனியன் தலைவர் ஜோசப் ஸ்டாலின் (Joseph Stalin) ஆகிய மூவரும் (Big Three) ஒன்றிணைந்தனர். ஹிட்லர் படை வீழ்ந்து, அவனும் தற்கொலை செய்து கொண்டு போர் முடிவுற்றது.

2026 சட்டமன்றத் தேர்தலில் அந்த நடிகர் தி.மு.க. கூட்டணிக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு பெற்று ஆட்சி அமைத்திருக்கிறார். நாடு பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. காத்திருப்போம் களத்தை நோக்கி!.....

இறுதியாக ஒன்று?.... மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் போன்றவற்றில் பெரும் மோசடி நடந்திருக்கிறது எனத் தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள், ஆய்வாளர்கள் கூறுவதையும் மறுத்து ஒதுக்கி விட முடியாது. இன்றைய அறிவியல் உலகத்தில் நடிகரின் பின்புலத்தில் இருந்து செயல்பட்ட ஜெகதீஷ் பழனிச்சாமி போன்றோரின் 'தி ரூட்' நிறுவனம், டிஜிட்டல் மேலாண்மை, இன்ஸ்டாகிராம், சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட செய்திகள் மூலம் இளைஞர்கள், பெண்கள், பொதுமக்கள் என மூளைச் சலவை செய்த அரசியல் மோசடிகள் நடைபெற்றுள்ளன என்று ஊடகங்கள் பல அம்பலப்படுத்தி வருகின்றன. இப்படியான கழகத் தோல்விக்கான காரணங்களையும் புறம் தள்ளி விடாமல்; நம் கழகம் கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் புலனாய்வு விழிப்புணர்வோடு எதிர்வினை ஆற்றவும் முன் வர வேண்டும்.

தேர்தல் மோசடித் தோல்விகளால் தி.மு.க.வைத் துவண்டுவிடச் செய்ய முடியாது. சூழ்ச்சிகள் வென்றதில்லை! சூரியன் மறைவதில்லை!



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவாலங்காடு மேற்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம். ராஜேந்திரன், ஏற்பாட்டில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், கலந்துகொண்டு நீர்மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிநீர், மோர், இளநீர், தர்பூசணி, கிருனி பழம், குளிர்பானங்கள், ஆகியவற்றை வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் காஞ்சிபாடி சரவணன், சுஜாதா குமார், வேலன், காஞ்சிபாடி யுவராஜ், கணேசன், மது பிரசாத், வேலு, ரமேஷ், பிரபு, பாஸ்கர், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.தனியரசு எம்.சி. ஏற்பாட்டில்
## திருவொற்றியூர் கிழக்குப் பகுதியில் தண்ணீர் பந்தல்!
### மாதவரம் எஸ்,சுதர்சனம் திறக்கிறார்! கலாநிதி வீராசாமி – கே,பி,சங்கர் பங்கேற்பு!

சென்னை, மே 12 - சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர்1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் தண்ணீர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி 13.5.2026 காலை 10 மணிக்கு பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் டி.எச். ரோடு பூர்விகா மொபைல் அருகில் நடைபெறுகிறது.

கௌரி ஆஸ்ரமம் அருகில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன் தலைமையிலும்


11வது வட்ட செயலாளர் குருத்து சி.முனுசாமி தலைமையில் எல்லையம்மன் கோயில்ஆகியஇடங்களில் தண்ணீர் பந்தல் திறந்த வைக்கப்படுகிறது.

அனைத்து இடங்களிலும் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் திறந்து வைக்கிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதி நிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

### தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர்
## கூத்தம்பூண்டி க.தங்கராஜ் மறைவு!
### மாவட்டக் கழகச் செயலாளர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. அஞ்சலி!



திண்டுக்கல், மே 12 - திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி, தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றிய கழக முன்னாள் செயலாளரும், கூத்தம் பூண்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், தலைமை பொதுக்குழு உறுப்பினருமான க.தங்கராஜ் அவர்கள் நேற்று (11.05.2026) அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவருக்கு க.லட்சுமி என்ற மனைவியும், க.முத்துச்செல்வி என்ற மகளும் க.ஆனந்தகுமார் என்ற மகனும் உள்ளனர்.

தகவல் அறிந்ததும் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. மறைந்த க.தங்கராஜ் அவர்களின் உடலுக்கு மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

### தென்காசி மாவட்டம்
## மேலகரம் பேரூர்ச் செயலாளர் ஈ.சுடலை மறைவு!
### கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை,வே.ஜெயபாலன்,பொ. சிவபத்மநாதன்,ராணி ஸ்ரீ குமார் எம்.பி. அஞ்சலி!



தென்காசி. மே.12-

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி ஒன்றியம் மேலகரம் பேரூர் செயலாளர் ஈ.சுடலை (வயது 57) அவர்கள் கடந்த (09.05.2026 சனிக்கிழமை) அன்று அன்னாரது இல்லத்தில் நெஞ்சு வலி காரணமாக மறைவெய்தினார். என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் அன்னாரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தென்காசி மாவட்டம் தென்காசி ஒன்றியம் மேலகரம் பேரூர்க் கழகச் செயலாளர் ஈ.சுடலை (வயது 57) அவர்கள் கடந்த ( 9ஆம் தேதி சனிக்கிழமை) அன்று நெஞ்சுவலி காரணமாக அன்னாரது இல்லத்தில் இயற்கை எய்தினார். அவருக்கு இசக்கியம்மாள் என்ற மனைவியும், அவர்களுக்கு வீரபாண்டியன், சங்கர், முருகேசன் என்ற மூன்று மகன்களும் உள்ளனர். இதில் வீரபாண்டியனின் மனைவி வேணி அவர்கள் மேலகரம் பேரூராட்சி மன்ற தலைவராக இருந்து வருகிறார். ஆதாவது மறைந்த மேலகரம் பேரூர் செயலாளர் ஈ.சுடலை அவர்களின் மருமகள் ஆவார்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் நேற்று முன்தினம் (10.05. 2026 ஞாயிறு) அன்று தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி நகர செயலாளர் சாதிர், குற்றாலம் பேரூராட்சி செயலாளர் குட்டி உட்பட கழக நிர்வாகிகள் பலர் அன்னாரது இல்லத்திற்கு சென்று மறைந்த பேரூர் செயலாளர் ஈ.சுடலை அவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (11.05.2026 திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இதில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை பங்கேற்று அன்னாரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இரங்கல் நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன், முன்னாள் கடையநல்லூர் ஒன்றிய செயலாளர் காசி தர்மம் துரை, கடையம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாக்ரடீஸ், வழக்கறிஞர் வேலுச் சாமி, குற்றாலம் பேரூர் செயலாளர் குட்டி, தொழிலதிபர் வினோத், மாவட்டப் பிரதி ஸ்டீபன்சத்யராஜ், கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், மேலகரம் பேரூராட்சி துணைத் தலைவர் ஜீவானந்தம், அவை தலைவர் சலீம், மேலகரம் பொருளாளர் ரமேஷ், மேலகரம் கவுன்சிலர்கள் கபில், நாகராஜ், சிங்கத்துரை, சுந்தர்,

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கதிர், பாலசுப்பிரமணியம், கணேசன், கல்யாணி சந்திரன், பட்டன், வீரபாண்டியன், மாரியப்பன், குற்றாலம் வார்டு செயலாளர் கணேசன், ஜெய்சங்கர், வினோத், குற்றாலம் குத்தாலிங்கம், குமார், குடியிருப்பு கணேசன், கீழபாவூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன், வார்டு செயலாளர் குத்தாலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர் கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தென்காசி தெற்கு – மேலகரம் பேரூர்ச் செயலாளர்
## இ.சுடலை மறைவு!
### கழகத் தலைவர் மு.க,ஸ்டாலின் இரங்கல்!

தென்காசி, மே.12-

தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி ஒன்றியம், மேலகரம் பேரூர் செயலாளர் இ.சுடலை (வயது 57) அவர்கள் 9.5.2026 அன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அந்த இரங்கல் செய்தியில், "தென்காசி மாவட்டம், தென்காசி ஒன்றியம், மேலகரம் பேரூர்க் கழகச் செயலாளர் இ.சுடலை அவர்கள் உடல்நலக் குறைவால் இயற்கையெய்தினார் என்ற செய்தியறிந்து வருந்தினேன். மேலகரம் பேரூர் கழக செயலாளராக திறம்பட பணியாற்றிய இ.சுடலை அவர்களின் மறைவு தவிர்க்க முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் அவர் குடும்பத்தினருக்கும், அப்பகுதி கழகத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி ஒன்றியம் மேலகரம் பேரூர் செயலாளர் ஈ.சுடலை (வயது 57) அவர்கள் கடந்த 09.05.2026 – சனிக்கிழமை அன்று நெஞ்சுவலி காரணமாக இயற்கை எய்தினார். அன்னாரது உடலுக்கு கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.உடன் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் காசிதர்மம், துரை, கடையம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.